ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1778/38 - 2012 ඔක්තෝබර් 05 වැනි සිකුරාදා - 2012.10.05
*1778/38 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சிவில் விமான சேவைகள் அதிகார சபை

விமானப் போக்குவரத்து ஒழுங்குவிதிகள், 196 இன் கீழ் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் அறிவித்தல்

விரிவான உள்நாட்டுப் பிரயாணிகள் விமானப் போக்குவரத்து சேவைகள் (Domestic Scheduled Operations) நாட்டில் முன்னெடுக்கப்படுவதற்காக 1955 ஆம் ஆண்டின் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க விமானச் செயற்பாட்டுச் சான்றிதழ்/விமானக் கம்பனிச் சான்றிதழ், பெற்றுக்கொள்வதற்கு பத்தரமுல்ல, பிரதான வீதி, இல. 34 இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட ஹைப்பிரிட் எவியேசன்ஸ் கொம் (தனியார்) கம்பனியினால் 2012, யூலை 09 ஆந் திகதி கொண்ட விண்ணப்பப்படிவம் 2012, யூலை மாதம் 11 ஆந் திகதி இவ்வலுவலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது. விண்ணப்பப்படிவத்துக்கு அமைய வரையறுக்கப்பட்ட ஹைப்பிரிட் எவியேசன்ஸ் கொம் (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபை கீழ்வருமாறு அமைகின்றது:-

திரு. ஜயந்த மிஹிர விக்கிரமாராச்சி
திரு. தென்கொட்டி ருவன்சாந்த டீ சில்வா கருணாரட்ன.

இக்கம்பனியின் உத்தேச விமானச் செயற்பாடுகள் தொடர்பான முழுமையான பொறுப்புக்களைக் கொண்ட முகாமைத்துவத்திற்காக திரு. கீர்த்தி திசாநாயக்க அவர்கள் வரையறுக்கப்பட்ட ஹைப்பிரிட் எவியேசன்ஸ் கொம் (தனியார்) கம்பனியினால் பெயரிடப்பட்டுள்ளார்.

விண்ணப்பதாரியின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி கொழும்பு - 02, ஹுணுப்பிட்டிய வீதி, இல. 04 இல் அமைந்துள்ள சிவில் விமான சேவை அதிகார சபையின் கீழ் தளத்தில் அமைந்துள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் எந்தவொரு கடமை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் பொதுமக்களுக்கு பார்வையிட முடியும்.

உத்தேச செயற்பாடுகளுக்காகத் தேவையான விமான செயற்பாட்டு சான்றிதழ் (Air Operator Certificate) விமான கம்பனி அனுமதிப்பத்திரம் (Airline License) உட்பட ஏனைய உரிய அங்கீகாரங்களை வழங்குவதற்கு முன்னர், விமானப் போக்குவரத்துக் கோவைகளைப் போன்று உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகள் (International Standard and Recommended Practices) மற்றும் இந்நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தொடர்புபடுத்தப்பட்ட உள்நாட்டுத் தேவைகளுக்கு அமைய நம்பகத் தன்மையும் பாதுகாப்பும் வினைத்திறனும் மிக்க விமானப் போக்குவரத்துச் சேவைச் செயற்பாடுகளை நடாத்துவதற்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகள் நிலையியற் சபைச் செயற்பாடுகளுக்கு அமைய உரியவாறு பரிசீலனை செய்து இவ்விண்ணப்பத்தினை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டங்கள் 2012, ஒற்றோபர் 25 ஆந் திகதிக்குப் பின்னர் என்னால் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேற்கூறப்பட்ட வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு 10 நாட்களுக்கு முன்னர் எந்தவொரு நபருக்கும் மேற்கூறப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பில் எழுத்து மூலம் உரிய காரணத்தை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் விமானப் போக்குவரத்து ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக எனக்கு அனுப்ப முடியும். அதில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல வியடங்களினதும் உண்மைத் தன்மையினை எழுத்துமூல சாட்சியுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறான தகவல்களை எனக்குச் சமர்பிக்கும் வேளையில் அவர் அதன் பிரதியை விண்ணப்பதாரிக்குக் கிடைக்கச் செய்ய வேண்டியதுடன் அவ்வாறு அனுப்பப்பட்டதற்கான சான்றிதழை உரிய விடயக் குறிப்புடன் இணைத்து வைக்க வேண்டும்.

எச். எம். சீ. நிமல்சிறி,
சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும்
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை,
இல. 04, ஹுணுப்பிட்டி வீதி,
கொழும்பு 02,
2012, ஒற்றோபர் 3.

10 - 792

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.